ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் நடைபெற்ற சென்னிமலை காளிக்காவலசு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்றுமதி விற்பனை நிலையம் திறப்பு நிகழ்ச்சியில் அமைச்சர் மு. பெ. சாமிநாதன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், கைத்தறித்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி, அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசியல் கட்சிகளின் பேச்சுரிமை உள்பட

அடிப்படை உரிமைகள் மீறப்படாமல் இருக்க வேண்டும்!

பிரச்சாரம் செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது குறித்து அனைத்துக்கட்சிக் கூட்டத்துக்குப் பின் – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, நவ.7

கரூரில் கடந்த செப்டம்பர் 27-ஆம் தேதி தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பங்கேற்ற பிரசாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். ஏராள மானோர் காயம் அடைந்தனர்.

இனி இதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் இருக்க அரசியல் கட்சி பொதுக் கூட்டங்கள் பிரசாரங்களுள், ரோடு ஷோ நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தும் போது அசம்பாவிதங்கள் நிகழாமல் இருக்க அனைவருக்கும் அனுமதி வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து சமர்ப்பிக்க வேண்டும் என அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சில நாட்களுக்கு முன்பு வழிகாட்டுதல்களை உருவாக்க ஆலோசனை நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து நேற்று சென்னை தலைமை செயலகத்தில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் பிரதிநிதிகளுடன் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் அரசு சார்பில் மூத்த அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, மா. சுப்பிரமணியன் மற்றும் தலைமை செயலாளர் முருகானந்தம், உள்துறை செயலாளர், டி.ஜி.பி. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. கூட்டணி சார்பில் ஆர்.எஸ். பாரதி, என்.ஆர்.இளங்கோ எம்.பி. உள்பட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள், தலைவர்கள் பங்கேற்று கருத்துகளை தெரிவித்தனர்.

பிரசார கூட்டங்களுக்கான விதிகள் அனைத்து கட்சிகளுக்கும் ஒரேமாதிரி இருக்க வேண்டும் என்று பலர் வலியுறுத்தினார்கள்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நிருபர்களிடம் கூறியதாவது:-

அரசியலமைப்பு சட்டபடி நிபந்தனைகளை வகுக்கலாம் என்று கூறி உள்ளோம். அரசியல் கட்சியின் அடிப்படை உரிமையான பேச்சுரிமை, எழுத்துரிமை பாதுகாக்கப்படும் வகையில் நிபந்தனைகளை வகுக்க வேண்டும். அதன் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப தி.மு.க. நடந்து கொள்ளும்.

அடிப்படை உரிமைகளை மீறக் கூடாது!

எந்த நிபந்தனைகள் விதித்தாலும், அடிப்படை உரிமை கள் மீறப்படாமல் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அந்த வகையில் அரசு போடுகின்ற உத்தரவுகள், நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகள் அடிப்படை உரிமைகளை மீறாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தி.மு.க. தனது கருத்தை பதிவு செய்தது. அடிப்படை உரிமை பொருள் 19/1பி மீறாத வகையில் எந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டாலும் தி.மு.க.அதை ஏற்றுக்கொள்ளும். இன்று எடுக்கப்படும் முடிவு, நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்தார்.

சைதை கிழக்குப் பகுதி அடையாறு மண்டலம் வார்டு–169 , ஜோதியம்மாள் நகரில் மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூ.4.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சலவைக் கூடத்தினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். உடன் துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அதிகாரிகள் இருந்தனர்.

அரசு அதிகாரிகள் – உர உற்பத்தி நிறுவனங்களுடன்

சம்பா பருவத்திற்குத் தேவையான உரம் இருப்பு குறித்து ஆலோசனை!

தலைமைச் செயலகத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மேற்கொண்டார்

சென்னை, நவ. 7 - தமிழ்நாட்டில் "சம்பா பருவத்திற்கு தேவையான உரம் இருப்பு மற்றும் விநியோகத்தை உறுதி செய்வது" குறித்து கூட்டுறவுத்துறை அலுவலர்கள், வேளாண்மைத்துறை மாவட்ட அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி நிறுவனங்களுடன் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையினால் அணைகள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர்ந்ததுடன், சம்பா (இராபி) பருவத்தில் நெல், மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை, கரும்பு, காய்கறிகள் உள்ளிட்ட தோட்டக்கலைப்பயிர்களின் சாகுபடி தீவிரமடைந்து வருகிறது. இதற்குத்தேவையான உரங்களை எவ்விதத் தட்டுப்பாடுமின்றி விவசாயிகளுக்குக் கிடைக்கச்செய்வதை உறுதி செய்திட மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையில் ஆய்வுக்கூட்டங்கள் தொடந்து நடத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக "சம்பா பருவத்திற்கு தேவையான உரம் இருப்பு மற்றும் விநியோகத்தை உறுதி செய்வது" குறித்து 5.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் கூட்டுறவுத்துறை அலுவலர்கள், வேளாண்மைத்துறை மாவட்ட அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி நிறுவனங்களுடன் விரிவான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள், மாதாந்திர உர ஒதுக்கீட்டின்படி அனைத்து உரங்களையும் கூட்டுறவு நிறு வனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் முழுமையாக விநியோகம் செய்யவும் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களுக்கு எவ்வித குறைவுமின்றி வழங்கிடவும், இரயில் முனையங்களுக்கு வந்தடையும் உரங்களை வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு), கூட்டுறவுத்துறை அலுவலர், உர நிறுவனங்களின் பிரதிநிதி ஆகியோர் மாவட்டங்களுக்குத் தேவைப்படும் உரங்களை உர ஒதுக்கீட்டின்படி உர நிறுவனங்களால் சரியான விகிதத்தில் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்திடவேண்டும் என்றும், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) ஆகியோர் தங்களது மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு மற்றும் சில்லரை உர விற்பனை நிலையங்களில் உர இருப்பு மற்றும் விநியோகத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும்,

மேலும், மாவட்டங்களில் சாகுபடி பரப்பு மற்றும் தேவைக்கேற்ப உரங்களை இருப்பு வைக்கவும், இருப்பு ஏதும் இல்லாத கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு உடனடியாக இருப்பு வைத்திட தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், நவம்பர் மாத விநியோக திட்டத்தின்படி, உர நிறுவனங்களிடமிருந்து உரங்களை கொள்முதல் செய்து அனைத்து கூட்டுறவு விற்பனை நிலையங்களிலும் போதுமான இருப்பு வைத்து விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி விநியோகம் செய்திட வேண்டும் என்றும்

தற்போது திருவண்ணாமலை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களின் நெல் சாகுபடி அதிகப் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் தட்டுப்பாடின்றி உரங்கள் உடனடியாக விநியோகம் செய்யவேண்டும் என்றும், போதுமான தொழிலாளர்களை ஈடுபடுத்தி உரங்களை உரிய இடத்திற்கு காலத்தே நகர்வு செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மானிய விலையில் உரங்களை விநியோகம் செய்யும்போது எவ்வித இணை இடுபொருட்களையும் கட்டாயப்படுத்தி விற்பனை செய்யக்கூடாது என்று உர நிறுவனங்களுக்கும், மாவட்ட உரத்தேவைக் கேற்ப கூட்டுறவு நிறுவனங்களில் உரங்களை இருப்பு வைக்கும் பொருட்டு தேவைப்பட்டியல்களை உர நிறுவனங்களிடம் முன்னதாகவே அளிக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய (TANFED) அலுவலர்களுக்கும் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், பொது மேலாளர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள், மாவட்ட அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி/இறக்குமதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

க.தனசேகரன் எம்.சி. தலைமையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

கலைஞர் நகரில் மாபெரும் பொதுக்கூட்டம்! 4000 பேருக்கு நல உதவிகள்:

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. – மு.ராஜா – கே. கண்ணன் பங்கேற்பு!

சென்னை, நவ. 7 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 4000 குடும்பங்களுக்கு நல உதவிகள் வழங்கும் விழா நாளை (8.11.2025 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு தசரதபுரம் பேருந்து நிலையம் அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் - சென்னை மாநகராட்சி கணக்கு தணிக்கைக் குழுத் தலைவர் க.தனசேகரன் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் மு.இராசா எம்.சி. கே.கண்ணன் எம்.சி., ஹாஜி எஸ். அபுபக்கர், ப.முத்துவேல், எஸ்.கமலகண்ணன், டி.எஸ்.பி.தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கனிமொழி தனசேகரன், எஸ்.பாஸ்கரன், ஆர். பாபு, து.ரஞ்சித் குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் 4000 பேருக்கு நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ., வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், வே.உமாகாந்த், எஸ்.டி.தங்கராசன், உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், வாசுகி பாண்டியன், ஆர்.சசிகுமார், நிஷா சையத், ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., நிலவரசி துரைராஜ், எஸ்.உமாபதி, எஸ்.ரவி, பெ.தியாகு, அ.பாபு, வட்டச் செயலாளர்கள் பொன் வர,லோகு, எஸ்.மைக்கேல், மு.கோவிந்தராசன், வீ.ஏ.ராஜா,

பி.கே.குமார், கே.சதீஷ் கண்ணன், அ.கதிரேசன், சோ.செந்தில்குமார், இரா. செழியன், ஆர்.பழனிச்சாமி, ஐம்புமுருகன், மாவட்ட பிரதிநிதிகள் க. அர்ச்சுனன், SMD.முகேஷ். எஸ். சண்முகம். சு. இளங்கோவன் சொ.ஜெயக்குமார், க.பாலமுருகன், ச. ரா.சீனிவாசன், அ.ஸ்ரீதர், அர.அ.எழில்வாணன், ஆர். டி.நல்லேந்திரன், அய்யாவு பழனி, சோழா எஸ்.ரவி, என்.ரவி, பா.தினே ஷ்குமார், க.இளங்கோ, த.முத்து மாரியப்பன், எம்.வீரா, கே.சசி, ஏ.ஜெகதீசன். கே.முருகன் போஸ்.பழனியப்பன் க.கருணாகரன் சி. நந்தகோபல், பூ.ராஜா. இரா.சங்கர் கே.ரவிக்குமார் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பா.குமரன், ரவிஜெயபால், டாக்டர் எஸ்.ஆனந்த்குமார், வழக்கறிஞர் எஸ்.முருகன், டி.எஸ்.பி.தமிழ்செல்வன், இரா.பாஸ்கர், ஆ.நசீர்.ஆர். சுரேஷ்பாபு. வி.ஏ. மகாதேவன், சி.ராஜேஷ், ஆர்.தாயுமானவன், டி.கலீம், ஏ. எல்.எ.மகேஷ் ஆர்.விஜயலட்சுமி, து.ராஜா, எம்.பூங்குழலி, , பி.கசாலி, பொன். பாஸ்கர், கே.வெங்கடேசன் பொன். கோவிந்தராஜன், பி.சி.மோகன் எம்.பத்மா

மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.ராமமூர்த்தி, சென்னை த.அரங்கநாதன், சு.சம்மந்தன் க.உமாபதி, .ச.பொன்னுரங்கம், ப.பாலமுருகன், ஏ. மருதுராம், என்.எஸ்.மணி, ஆர்.பாலாஜி, இ.பூபதி, டி.அசோக்குமார், நா.பா. வெங்கடேசன், க.சமையன், ஜெ.சீனிவாசன் ஜி. லட்சுமி ஆர்.கே.ஆனந்த் ஏ.எஸ்.மகேந்திரன் கே.வி. எஸ்.சுரேஷ் என்.மாதவன் மு.மேகநாதன் ஆர்.சசிமனோஜ் என்.தீனதயாளன் ஜெ.சண்முகராஜ் பா. மேகலா. இ.ரஹ்மத்துல்லாஹ் என்.எம்.முகமது ரியாஸ். எஸ்.சீனிவாசன், நிவேதிதா பாஸ்கர் பி.சுரேஷ் ச.கார்த்திக் இ.நிலவரசன் அல்.ஐயப்பன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

எஸ்.விஜயகுமார், சா. நாகராசன், விஜயலட்சுமி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு ஏ.கே. கல்வி அறக்கட்டளை மகளிர் மேம்பாட்டு சுயநிதி உதவிக் குழு.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 260 வது நாள்!

அம்பத்தூர் கிழக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, நவ. 7 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 260 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (06.11.2025), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 83 அ, RK லிங்க் சாலை, தாதம் குப்பம், 2) வட்டம் 83, விநாயகர் கோவில் அருகில், சிவலிங்கபுரம், கொரட்டூர் அக்கிரஹாரம், சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும்,

எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே. மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி. வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு. மோகன்குமார், மு.விஜய குமார், த.வ.லால் பி.செந்தில். வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகி ருஷ்ணன், த.கண்ணபிரான், எம். கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

எழும்பூர் 99வது வார்டில் 2025 - 2026க்கான

மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பணிகள்!

பரிதி இளம் சுருதி நேரில் பார்வையிட்டார்!

சென்னை,நவ.7- , சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு அவர்களின் ஆலோசனைப்படி, எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட கீழ்பாக்கம் காவலர் குடியிருப்பு சாலையில் நடைபெற்ற தூய்மை பணி, நேரு பூங்கா நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நேரு பூங்காவில் தனது 2025 மற்றும் 2026ஆம் ஆண்டு மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நடைபெற்று வரும் பணிகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய பணிகள், ஓசாங்குளம் பகுதியில் இருந்து புல்லாபுரம் பகுதிக்கு இணைக்கப்பட்ட குடிநீர் இணைப்பு, மற்றும் புதிய பூபதி நகரில் உள்ள பள்ளிவாசலில் ஏற்பட்ட கழிவு நீர் வடிகால் பிரச்சினை, ஆகிய பணிகளை கழக அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.பரிதிஇளம்சுருதி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

புதுதில்லியில் 45வது காவிரிநீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நேற்று (06.11.2025) எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் மற்றும் காவிரி தொழில் நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவின் தலைவர் இரா.சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2) மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் கலந்து கொண்டு (SIR) பணிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கினார்.